**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை**

**CC No.264/2015**

| | | | |
|---|---|---|---|
| 1. | **குற்றமுறையீட்டாளர்** | : | அரசுக்காக: காவல் ஆய்வாளர்,<br>நாகுடி காவல் நிலையம்.<br>குற்ற எண்.115/2015. |
| 2. | **குற்றம் சாட்டப்பட்டவர் பெயர் மற்றும் விலாசம்** | : | மேகநாதன்,<br>த/பெ. செல்வன்.<br><br>**எதிரியின் முகவரி:**<br>கட்டுக்கரை,<br>அறந்தாங்கி தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. | **குற்றம் நடந்த நாள்** | : | 16.08.2015 |
| 4. | **புகார் அளிக்கப்பட்ட நாள்** | : | 16.08.2015 |
| 5. | **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்** | : | 16.08.2015 |
| 6. | **குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நாள்** | | கைது செய்யப்படவில்லை |
| 7. | **குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் வந்த நாள்** | | கைது செய்யப்படவில்லை |
| 8. | **குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | | 10.10.2015 |
| 9. | **குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு** | | **இ.த.ச பிரிவுகள்** 279, 337, 304(A) of IPC |
| 11. | **வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட நாள் மற்றும் முடிக்கப்பட்ட நாள்** | : | 20.06.2022–26.02.2026 |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| PW1 | – 20.06.2022 | 20.06.2022 |
| PW2 | – 20.06.2022 | 20.06.2022 |
| PW3 | – 20.06.2022 | 20.06.2022 |

| | |
|---|---|
| PW4 – 20.06.2022 | 20.06.2022 |
| PW5 – 20.06.2022 | 20.06.2022 |
| PW6 – 20.06.2022 | 20.06.2022 |
| PW7 – 19.07.2022 | 19.07.2022 |
| PW8 – 17.08.2022 | 17.08.2022 |
| PW9 – 17.08.2022 | 26.02.2026 |

**12. நீதிமன்றத்தின் முடிவு** : எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) of IPC இன் கீழுமான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**13. வழக்கு சொத்து** : ஏதுமில்லை

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.இராமநாதன் B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்.....

<u>**தீர்ப்புரை**</u>

அரசு தரப்பில் எதிரியின் மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் U/s. இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) of IPC இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***இனிமுதற்கொண்டு இந்திய தண்டனைச்சட்டம் என்பது இ.த.ச. என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் என்பது கு.வி.மு.ச. என்றும் அழைக்கப்படும்.***

**1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் இறந்துபோன சௌந்தரராஜன் கடந்த 14.08.2015–ம் தேதி மதியம் 01.30 மணியளவில் தனது TN 55Y 8768 என்ற TVS SPORT இருசக்கர வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றுள்ளார். அப்போது எதிர் திசையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி TN 63 T 7045 SPLENDER+ இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிரி மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதமாக அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து எதிரே வந்த சௌந்தர்ராஜன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். இதில் சௌந்தர்ராஜன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார். எனவே, எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) of IPC–ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் என நாகுடி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) வழக்கினை கோப்பிற்கு எடுத்தல், அழைப்பாணை, நகல் வழங்குதல் :**

இந்நீதிமன்றத்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், ஆவணங்கள் போன்றவைகளை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு உள்ளதென இந்நீதிமன்றம் கருதியதால், வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு **கு.வி.மு.ச. பிரிவு 204** இன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானதும், **கு.வி.மு.ச. பிரிவு 207** இன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைதல் மற்றும் எதிரிகளின் பதில் :**

பின்பு எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) of IPC இன் கீழ் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் உள்ளதென கருதியதால், எதிரி மீது **கு.வி.மு.ச. பிரிவு 240(1)** இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து **கு.வி.மு.ச. பிரிவு 240(2)** இன் கீழ் எதிரியிடம் தமிழில் விளக்கி கூறி வினவிய

போது, எதிரி பொய் வழக்கு என்று மறுத்துரைத்து வழக்கு விசாரணைக்கு வேண்டுரைத்தனர். எனவே இந்நீதிமன்றமானது **கு.வி.மு.ச. பிரிவு 242(1)** இன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிட்டது.

<u>**4) அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :**</u>

**4.1) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9** வரையிலான சாட்சியங்களும், **அ.சா.ஆ.1 முதல் 9** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் இல்லை.

4.2) அரசு தரப்பில் **அ.சா.1** ஆக குமார் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.2** ஆக இளங்கோவன் என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.3** ஆக சந்திரா என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.4** ஆக பாரதி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.5** ஆக நேதாஜி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.6** ஆக ரஞ்சித் என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.7** ஆக சுப்பையா என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.8** ஆக சிதம்பரம் என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.9** ஆக பாலமுருகன் என்பவர் விசாரணை செய்யப்பட்டும், அவர் மூலம் **அ.சா.ஆ.3** ஆக முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டும், பார்வை மகஜரானது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.ஆ.5** ஆக மாதிரி வரைபடம் குறியீடு செய்யப்பட்டும், பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்பட்டும், பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்டும், இருவாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையானது **அ.சா.ஆ.8** மற்றும் **அ.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை. சான்றுப் பொருட்கள் இல்லை.

<u>5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழான வினா மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியம்:</u>

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டவுடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்கள் குறித்து

எதிரியிடம் **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)** இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதிலுரைத்ததால், எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6)அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் இருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

கடந்த 16.08.2015–ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எதிரி TN 63 T 7045 என்ற பதிவெண் கொண்ட SPLENDER+ இரு சக்கர வாகனத்தை கிழக்கில் இருந்து மேற்காக கோட்டைப்பட்டிணத்தில் இருந்து ஆவுடையார் கோவிலுக்கும், இறந்துபோன நபர் மேற்கில் இருந்து கிழக்காக ஆவுடையார்கோவிலிருந்து கோட்டைப்பட்டிணத்தில் உள்ள சாலையில், மாவடிக்கோட்டை பஸ் ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்த போது, எதிரியின் வாகனம் இறந்து போன நபரின் வாகனத்தின் மீது மோதி விபத்தில் சௌந்தரராஜனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்ததாகவும், எதிரியின் வாகனத்தில் அ.சா.5 நேதாஜி பயணித்ததாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகளாகவும், அ.சா.3 மற்றும் அ.சா.4 வழக்கு விபத்தினை பற்றி கேள்விப்பட்ட சாட்சியாகவும், அ.சா.5 எதிரி இயக்கிய வாகனத்தில் பயணம் செய்த மற்றொரு சாட்சி ஆவார் என்றும், அ.சா.6 ஆக வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சியம் என்றும், அ.சா.7 மற்றும் அ.சா.8 பார்வை மகஜர் சாட்சிகளும், அ.சா.9 புலன் விசாரணை அதிகாரியும் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.1 நிகழ்நிலை புகார்தாரர் மூலம் அ.சா.ஆ.1 புகார் ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.7 பார்வை மகஜர் சாட்சி மூலம் அ.சா.ஆ.4–ல் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை, உடல் கூராய்வு சான்று, மாதிரி வரைபடம், முதல் தகவல் அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகியவை அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7) அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதம்:**

**7.1)** அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை II அவர்கள் தனது வாதத்தில், இவ்வழக்கில் இறந்துபோன நபர் அ.சா.2–ன் அக்கா மகள்

திருமணத்திற்கு பத்திரிக்கை வைப்பதற்காக ஆவுடையார்கோவிலிருந்து கோட்டைப்பட்டிணத்தில் உள்ள சாலையில், மாவடிக்கோட்டை பஸ் ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்த போது, எதிரியின் வாகனம் இறந்து போன நபரின் வாகனத்தின் மீது மோதி விபத்தில் சௌந்தரராஜனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், வழக்கு சம்பவத்தை அ.சா.1 மற்றும் அ.சா.2 50 அடி துாரத்தில் பார்த்ததாகவும், அ.சா.3 விபத்தில் இறந்துபோனவரின் மனைவி என்றும், அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளனர் என்றும், அ.சா.6 மற்றும் அ.சா.7 சாட்சிகளின் சாட்சியத்தில், எவ்வித முரண்பாடும் இல்லை என்றும், எதிரி தான் இயக்கிய இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்கி சௌந்தரராஜன் மீது மோதியதால் சம்பவ இடத்திலேயே காயம்பட்டவர் இறந்துவிட்டார் என்றும், எதிரிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது குறித்து உடல் கூராய்வு சான்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் அ.சா.1, 2 மற்றும் அ.சா.4 முதல் 6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்றும், பார்வைமகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றின் மூலம் வழக்கு சம்பவம் தெளிவுற நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.2) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கின் இறந்து போன நபரின் மேலுள்ள கரிசனத்தின் பேரில், எதிரியின் மீது அரசு தரப்பில் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நிகழ்நிலை புகார்தாரர் தான் இயக்கி வந்த வாகனத்திற்கு அருகே பாண்டிபத்திரம் செல்லும் சாலை இருந்தும், அவர் அந்த சாலையில் ஒதுங்காமல் இருப்பதற்கான காரணம் எதிரி சரியான திசையில் வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்த வேளையில், இறந்துபோன சௌந்தரராஜன் எதிரியின் வாகனத்தின் மீது மோதினார் என்றும், இவ்வழக்கு சம்பவத்தினால் பலத்த காயம் ஏற்பட்ட எதிரி மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளார் என்றும், மேற்படி அ.சா.5 அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2

சாட்சிகள் விபத்தின்போது இறந்து போன நபர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு பின்பு பயணித்ததாக கூறப்பட்டுள்ளது.

7.3) மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் 20 அடி துூரத்தில் பயணம் செய்ததாக புகாரில் சொல்லப்பட்டிருந்தாலும், நீதிமன்ற விசாரணையில் 50 அடி துூரம் என்று எடுத்தரைத்துள்ளனர். சாதாரண மனிதனின் பார்வையில் 20 அடி துூரத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தால், கண்டிப்பாக அவர்களும் வழக்கு விபத்தில் அடிப்பட்டு இருப்பார்கள் என்றும், அவ்வாறு அடிப்படாமல் இருப்பதற்கு காரணம் அவர்கள் வழக்கு சம்பவ இடத்தில் இல்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக 1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் நெருங்கிய உறவினர்கள் என்றும், அதனால் இறப்பிற்கு எதிரி தான் காரணம் என்று எடுத்துரைத்துள்ளனர் என்று எடுத்துரைத்தார். விபத்தில் இறந்து போன நபருக்கு தலையில் ஏற்பட்ட பலத்த காயத்திற்கு காரணம் அவர் ஹெல்மெட் அணியாமல் சென்றது தான் என்றும், அ.சா.6 வழக்கு சம்பவத்தை பொறுத்து கேள்விப்பட்ட சாட்சி ஆவார் என்றும், வழக்கு சம்பவம் நடைப்பெற்றதாக கூறப்படும் இடம் சாலையின் வலதுபுறமா அல்லது இடதுபுறமா என்பதற்கான புகைப்படம் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இறந்து போன நபரின் மனைவி இருந்தும், அவர் புகார் அளிக்காமல் அ.சா.1 புகார் அளித்ததாகவும், மேற்படி புகாரினை அ.சா.2 எழுதியதாகவும் கூறப்படும் நிலையில், அ.சா.4 வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சி என்றும், மேலும் அ.சா.5 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, இறந்துபோன நபரின் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ளது ஆகியவற்றை பார்க்கும்போது, அரசு தரப்பில் எதிரி தனது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இயக்கினார் என்று கூறுவதற்கு ஆதரவாக எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் இல்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**8) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) இன் கீழுமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.**

**9) சாட்சியங்களின் பரிசீலனை மற்றும் பகுப்பாய்வு:**

10) இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

11) இவ்வழக்கில் எதிரியின் மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 279, 337, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை காணவேண்டியது அவசியமாக உள்ளது. எதிரி இ.த.ச.பிரிவு 304(A)–ன் கீழ் கவன குறைவினால் மரணத்தை விளைவித்தல் குற்றத்தை செய்தாரா இல்லையா என்பதை காணவேண்டியுள்ளது. இ.த.ச.பிரிவு304(A) கீழ்கண்டவாறு உள்ளது.

***304A. Causing death by negligence***

**Whoever causes the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide, shall be *punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both.***

12) எனவே, இவ்வழக்கின் எதிரியானவர் தான் இயக்கி வந்த வாகனத்தினை அதிவேகத்துடன் அல்லது கவன குறைவான முறையில் வாகனத்தை இயக்கி ஒரு நபருக்கு மனித மரணம் ஆகாத மரணத்தை விளைவித்தால் 2 வருடங்கள் வரை நீட்டிக்கப்படகூடிய மெய் காவல் சிறை தண்டணையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எதிரி மேற்கண்ட உட்கூறுகளின்படி தான் வாகனத்தை இயக்கி இறந்து போன நபருக்கு மரணத்தை ஏற்படுத்தியுள்ளாரா என்பதை அரசு தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்களின் மூலம் காணவேண்டியுள்ளது.

இவ்வழக்கின் எதிரி தான் இயக்கிய இருச்சக்கர வாகனத்தை இறந்து போன நபருக்கும், அ.சா.5—க்கும் காயத்தை ஏற்படுத்தும் வகையில் இயக்கினரா இல்லையா என்பது குறித்து சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது முதல் விசாரணையில்,

> *" <u>எனது அக்காவின் கணவர் சௌந்தர்ராஜன் தன்னுடை இருசக்கர வாகனத்தில் 16.08.2015 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் ஆவுடையார்கோவில் டு கோட்டைப்பட்டிணம் சாலையில் உள்ள மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்தார்.</u> நான் அவரை தொடர்ந்து <u>50 அடி இடைவெளியிலும் நானும் எனது நண்பர் பட்டியல் சாட்சி இளங்கோ பின் எங்களுடைய இருசக்கர வாகனம் தொடர்ந்து சென்றோம்.</u> அப்போது <u>இறந்துபோன சௌந்தர்ராஜன் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தார்.</u> எதிர் திசையில் கோட்டைப்பட்டிணம் டு ஆவுடையார்கோவில் வந்து கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தில் இருவர் வந்தனர். <u>அவர்கள் மிகவும் வேகமாக கவனக்குறைவாகவும் வந்தனர். நான் மோதப்போராங்கன்னு சத்தம் போட்டோம்.</u> ஆனாலும் வேகமாக வந்த இருசக்கர வாகனம் ஏறிவந்து மோதிவிட்டது. <u>அப்போது விழுந்து கிடந்த சௌந்தர்ராஜன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.</u> அவருக்கு தலையிலும் நெற்றிப் பொட்டிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. எதிரில் வந்த இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு காயம் ஏற்பட்டது. முதலில் ஆவுடையார்கோவில் காவலர்கள் வந்து விசாரணை செய்துவிட்டு தங்களுடைய ஆள்வரைக்குள் இல்லையென சென்றுவிட்டனர். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து நாகுடி போலிசார் வந்தனர். "*

என்று மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

13) அ.சா.2 தனது முதல் விசாரணையில்,

*"16.08.2015 அன்று எனது அக்கா சந்திரா மகன் திருமணத்திற்கு பத்திரிக்கை வைப்பதற்காக சென்றோம். நானும் அ.சா.1–ம் ஒரு இருசக்கர வாகனத்திலும், இறந்த சௌந்தர்ராஜன் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்று கொண்டு இருந்தோம். ஆவுடையார்கோவில் டு கோட்டைப்பட்டிணம் சாலையில் எங்களுக்கு முன்னர் 50 அடி துாரத்தில் சென்று கொண்டு இருந்தார். மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் அருகே இடது ஓரமாக சென்று கொண்டு இருக்கும்போது கிழக்கிலிருந்து ஆவுடையார்கோவில் நோக்கி வந்து கொண்டு இருந்த இருசக்கர வாகனம் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் கன்ரோல் இல்லாமல் வந்தது. அப்போது எதிரே வந்த இருசக்கர வாகனம் அவருக்கு இடது புறம் செல்லாமல் ஏறி சௌந்தர்ராஜனின் இருசக்கர வாகனத்தில் வலது பக்கம் வந்து மோதிவிட்டது. சௌந்தர்ராஜனுக்கு பின் மண்டையிலும் நெற்றிப் பொட்டிலும் அடிப்பட்டு இருந்தது. சம்பவ இடத்திலேயே அவர் இறந்துவிட்டார். ஆவுடையார்கோவில் போலிசார் வந்தனர். விசாரணை செய்துவிட்டு நாகுடி காவல் நிலையத்தில் புகார் அளிக்க கூறினார். எதிரே வந்த மேகநாதன் வாகனத்தை ஓட்டி வந்தவருக்கு கையில் அடிப்பட்டு இருந்தது. அவருக்கு பின்னர் உட்கார்ந்து நேதாஜிக்கு கண்ணில் அடிப்பட்டு இருந்தது. இருவரும் Splender+ வாகனத்தில் வந்தனர். வாகனத்தை மோதிய இருநபர்கள் ஆம்புல்ன்ஸில் ஏறி சிகிச்சைக்கு சென்றனர். சௌந்தராஜனை கூட்டி செல்வதற்கு வாகனம் வரும்வரை நானும் குமாரும்*

***காத்திருந்து 1/2 மணி நேரம் கழித்து அறந்தாங்கி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு சென்றோம். நாகுடி போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்தனர். என்னையும் விசாரணை செய்தனர். அ.சா.ஆ.1 புகாரினை எழுதியது நான். கையொப்பம் இட்டது குமார். போலிசார் என்னை சம்பவம் தொடர்பாக விசாரணை செய்தார்கள். "***

என்று மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

14) மேற்படி அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ***இறந்து போன நபர் அக்கா கணவர் என்பதும், இறந்துபோன நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததும், அ.சா.2 புகாரியை எழுதியதாகவும், சம்பவமானது நடந்த போது எவ்வளவு துாரத்தில் இருந்தேன் என்றால் 20 அடி துாரத்தில் இருந்தேன் என்றும், அதேபோல் சம்பத்தை ஏற்படுத்திய நபருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், விபத்து நடந்த சமயத்தில் எங்களை தவிர வேறு யாரும் இல்லை*** என்றும் சாட்சியமளித்துள்ளார். ***சம்பவம் நடந்த பின்பு போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் ஒரு மணி நேரம் கழித்து வந்தார்கள்*** என்று சாட்சியமளித்துள்ளார்.

15) அ.சா.2 தனது முதல் விசாரணையில், 50 அடி துாரத்தில் சென்று கொண்டிருந்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் அ.சா.2 80 அடி துாரத்தில் சம்பவம் நடந்ததாகவும், அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். இறந்துபோன நபரின் மனைவி இருக்கும்போது, ஏன் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் மூலம் புகார் எழுதப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்று எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. அ.சா.3 காயம்பட்ட சாட்சி ஆவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அ.சா.3 தனது முதல் விசாரணையில், இறந்துபோன நபருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது குறித்து எடுத்துரைத்துள்ளார். சம்பவம் நடந்த பின்பு சம்பவ இடத்திற்கு வந்ததாக அ.சா.3 சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தனது முதல்

விசாரணையில், சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன் நேரில் நான் பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளதில் இருந்து, அ.சா.4 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சியல்ல என்பது தெளிவுற தெரிகிறது.

16) இவ்வழக்கின் முக்கியமான சாட்சியாக கருதப்படும் அ.சா.5 எதிரி இயக்கி வந்த வாகனத்தின் பின்னே அமர்ந்திருந்த நபர் ஆவார். அவர் தனது முதல் விசாரணையில், **பாதிக்கப்பட்ட நபரின் வண்டி வேகமாக வந்தது என்றும், நாங்கள் சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது** என்றும் அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.5 ஐ எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையின் போதும், **எதிரிக்கு சாதகமாக எதிரிக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும், நாங்கள் இடது ஓரமாக தான் வந்தோம் என்றும், நாங்கள் சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது** என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 ஐ மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, 19.11.2025-ம் தேதி செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில், **அப்போது எதிரே வந்த விபத்தில் இறந்துபோன நபர்தான் திடீர் என பள்ளத்தை பார்த்து இடது ஓரமாக சென்றவர், வலது ஓரமாக எதிரியின் வாகனத்தினை நோக்கி வந்துவிட்டார் என்றால் சரிதான் என்றும், விபத்தில் இறந்துபோன நபர் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும், வாகனத்தினை ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியமளித்தபோது மிதமான வேகத்தில் எதிரி வாகனத்தினை ஓட்டிவந்தார் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்** என்றும் சாட்சியமளித்துள்ளது அ.சா.5-ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் ஐயமுறும் வகையில் உள்ளது.

17) மேலும் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் இறந்து போன நபருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக சாட்சியமளித்துள்ளனர். அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உடல் கூராய்வு சான்றிதழிலும் இறந்துபோன நபருக்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இறந்துபோன நபர் தலைகவசம் அணிந்திருந்தால், அவருக்கு ஏற்பட்டிருந்த காயத்தை தடுத்திருக்ககூடும். மேலும் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில், எதிரி பயன்படுத்திய வாகனம் இறந்துபோன நபர்

பயன்படுத்திய வாகனம் இரண்டிலும் எவ்வித கோளாறும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் குறிப்பிடப்படவில்லை. இவ்வழக்கின் அ.சா.4 வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சி ஆவார். அ.சா.6 தனது முதல் விசாரணையில், **16.08.2015 அன்று மதியம் சுமார் 1.30 மணி போல் நான் விபத்து நடந்ததை கேள்விப்பட்டு அங்கு சென்று பார்த்தேன்** என்று சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.6–ம் வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சி ஆவார். அ.சா.8 மற்றும் அ.சா.7 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார். அ.சா.9 புலன் விசாரணை அதிகாரி ஆவார்.

18) இவ்வழக்கில் மிகவும் முக்கியமாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ கடந்த 06.11.2025–ம் தேதி மனுவின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, அ.சா.1 குறுக்கு விசாரணை பாரா 3–ல், **எதிரி கோட்டைப்பட்டிணத்தில் இருந்து கிழக்கில் இருந்து மேற்காக ஆவுடையார்கோவில் நோக்கி வந்தார் என்றால், சரிதான். எதிரி சாலையின் இடது ஓரத்தில் வந்தார் என்றால், அவர் எந்த ஓரத்தில் வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை** என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் முதல் விசாரணையில், **எதிரியின் வாகனமும், இறந்து போன நபரின் வாகனமும் மோத போறாங்கன்று சத்தம் போட்டதாக சாட்சியமளித்துவிட்டு**, தற்சமயம் எந்த ஓரத்தில் எதிரியின் வாகனம் வந்தது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.1 புகாரிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் வழக்கு சம்பவத்தின் போது 50 அடி துாரத்தில் இறந்து போன நபருக்கு அருகே சென்றிருந்தால், அவர்களும் சம்பவத்தின் போது இறந்து போன நபரின் வாகனத்தின் மீது மோதி இருக்க அதிக வாய்ப்பு உள்ளது. ஆனால் அதுபோன்று எவ்வித காயமும், எந்த வண்டியில் அ.சா.1 மற்றும் 2 இருந்தனர் என்று குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் இல்லை.

19) எனவே, இறந்துபோன நபர் தலையில் தலைகவசம் அணியாமல் சென்றுள்ளதும், அ.சா.1 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்து சத்தம்போட்டர் என்று சாட்சியமளித்துவிட்டு, பின்பு அவர் எந்த ஓரத்தில் வந்தார் என்று குறிப்பிடாததும், அ.சா.1 மற்றும் அ.சா.2 50 அடி துாரத்தில் பயணித்து இருந்தும், அவர்களுக்கு காயம்

ஏற்படாததும், இறந்துபோன நபரின் மனைவி இருந்தும் அவர் சாட்சியாக விசாரிக்கப்படாததும், அ.சா.5 எதிரி ஓட்டிய வாகனத்தின் பின் அமர்ந்து இருந்தவர் அரசு தரப்பிற்கு ஆதரவாகவும், எதிரி தரப்பிற்கு ஆதரவாகவும் மாற்றி மாற்றி சாட்சியமளித்துள்ளதும், அ.சா.4 மற்றும் அ.சா.6 வழக்கு சம்பவத்தினை குறித்து கேள்விப்பட்ட சாட்சியாக உள்ளதாலும், அ.சா.9 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து, இறந்து போன நபரின் இறப்பிற்கு எதிரி தான் இயக்கி வந்த வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்கினார் என்று தீர்மானிக்க இயலாது. எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளான இ.த.ச.பிரிவுகள் 279, 337, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் கீழ் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று கருதி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,** எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) இன் கீழுமான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

அ) வழக்கு சொத்து ஏதும் இல்லை என்பதால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த

பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| | | |
|---|---|---|
| **அ.சா.1** | : | குமார் |
| **அ.சா.2** | : | இளங்கோவன் |
| **அ.சா.3** | : | சந்திரா |
| **அ.சா.4** | : | பாரதி |
| **அ.சா.5** | : | நேதாஜி |
| **அ.சா.6** | : | ரஞ்சித் |
| **அ.சா.7** | : | சுப்பையா |
| **அ.சா.8** | : | சிதம்பரம் |
| **அ.சா.9** | : | பாலமுருகன் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | : | புகார் |
| **அ.சா.ஆ.2** | : | பார்வை மகஜரில் உள்ள 2–வது கையொப்பம் |
| **அ.சா.ஆ.3** | : | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.4** | : | பார்வை மகஜர் |
| **அ.சா.ஆ.5** | : | மாதிரி வரைபடம் |

**அ.சா.ஆ.6** : பிரேத விசாரணை அறிக்கை

**அ.சா.ஆ.7** : பிரேத பரிசோதனை அறிக்கை

**அ.சா.ஆ.8** : மோட்டார் வாகன ஆய்வறிக்கை

**அ.சா.ஆ.9** : மோட்டார் வாகன ஆய்வறிக்கை

**சான்று பொருள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

**பின்குறிப்பு :**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரிக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 04:55:37 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**